Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

வாழ்க்கை வரலாறு

ACC. NO.
46368

"தமிழ் வேதநாவலர்"

"வைத்தியமணி"

சற்குரு. சித. வே. சண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத் திருச்சபை, தேவகோட்டை

Koviloor Digital Library

Koviloor Digital Library

5/1

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

"தமிழ் வேதநாவலர்" "வைத்தியமணி"

சற்குரு. சித.வே. சண்முகநாதபிள்ளை

அவர்களின்

வாழ்க்கை வரலாறு

இந்நூலாசிரியர் :
மாணவன் புலவர் **க. அப்பாராசன்**

இஃது
கனடா டாக்டர் **சித. ஏகப்பன் செட்டியார்** அவர்கள்
ஆர்வத்தினாலும் பேரன்பினாலும்

கோயம்புத்தூர்
ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸில் பதிப்பிக்கப் பெற்றது.

வெளியீடு
முத்தமிழ் வேதத் திருச்சபை
முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளி
வ.பெரி.மு. தெரு, தேவகோட்டை - 630 302.

KOVILOOR ART ... LIBRARY, KOVILO...
46368

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

நூலின் பெயர்	:	"தமிழ் வேதநாவலர்" "வைத்தியமணி" சற்குரு. சித.வே. சண்முகநாதபிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு
முதற் பதிப்பு	:	சர்வதாரி ஆண்டு (2008) வைகாசி மாதம்
நூலாசிரியர்	:	மாணவர் புலவர் க. அப்பாராசன்
உரிமை	:	முத்தமிழ் வேதத் திருச்சபையோர், தேவகோட்டை.
பக்கங்கள்	:	44
வெளியீடு	:	முத்தமிழ் வேதத் திருச்சபையோர், தேவகோட்டை.
தாள்	:	80 ஜி.எஸ்.எம். காப்பியர்
நூலின் அளவு	:	டெமி 1/8
விலை	:	ரூ. 51.00
எழுத்து	:	14 புள்ளி
கிடைக்குமிடம்	:	**Dr. SV. முருகேஷ் R.I.M.P.A.M.I.H.** முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர் சித்த மருத்துவம் கிணற்றுநீர் நிபுணர், புதுக்கோட்டை. **இராம. ஆதிரெத்தினம்** இணைச் செயலாளர், முத்தமிழ் வேதத் திருச்சபை 19, ரெகுநாதபுரம் மேற்கு, தேவகோட்டை. போன் : 95+4561+270113 செல் : 9486361107 **உபமன்னியன் நூலகம்** 105/A1, கண்டதேவி ரோடு தேவகோட்டை - 630 302. போன் : 95+4561+309924 / செல் : 9486361107
கணினி & அச்சு அமைப்பு	:	**ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ்** கோயமுத்தூர் - 641 001. போன் : 0422+3247879 தேவகோட்டை - 630 302. போன் : 04561+261961 செல் : 9361410269 email : swamirajbal@gmail.com

Koviloor Digital Library

5/1

உ

சிவமயம்

அரி ஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

இந்நூலின் கலாநாயகர் :

"தமிழ் வேதநாவலர்" "வைத்தியமணி"

சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை

தேவகோட்டை

தமிழ் வேத நாவலர் வரலாற்றுக் குறிப்பு

Koviloor Digital Library

சிவமயம்

முன்னுரை

எம் ஞானத்தெளிவு குருவின் திருவடி உச்சி மேற்கொண்டு முன்னுரை எழுதுவோமாக.

கலியுகத்திற்கு கண்கண்ட கடவுளின் நாமத்தை தாங்கி உலகிற்கு ஒளியை தாம் ஆக்கிய நூல்கள் மூலம் தந்த பெரும் கருணை உள்ளம் கொண்டவர். அவர்தம் வாழ்க்கை வரலாற்றை அன்பு மாணக்கர் புலவர் அப்பாராசன் அவர்கள் எழுதி உலகிற்கு கிடைக்க வைத்த புண்ணியவான் ஆவார். இந்நூலை வெளியிட மிகுந்த ஆர்வம் கொண்ட டாக்டர் கனடா சித. ஏகப்பன் அவர்கள் ஞானத் தெளிவு குருவின் நல்ஆசி பெற்றவர். ஞானத் தெளிவு குருவின் நூல்கள் அனைத்தையும் உலகிற்கு கிடைக்க இறைவன் படைத்த உத்தமர். இவர்தம் தகப்பனர் சிவபுண்ணிய சிவனடியார் சிதம்பரம் செட்டியார் ஆவர். நன்முறையில் என்றும் நிலைத்து இருக்கும் தமிழ் எழுத்துக்களால் அச்சிட்ட ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ் குடும்பத்தார்க்கு முத்தமிழ் வேதத் திருச்சபையாரின் நன்றி. இந்நூலை வாசிப்பவர்கள் வாழ்வில் நல்ல திருப்பங்களை பெறுவார்கள் என்பது திண்ணம். ஞானத் தெளிவு குருவின் திருமுகத்தை மனதில் நிலைநிறுத்தி தியானம் செய்தால் புரியாத இடம் புரியும் என்பதும் திண்ணம். எல்லோரும் அவர்தம் நூல்களை வாசித்து வாழ்க்கையின் ரகசியத்தை அறிந்து முத்திநிலை எய்தி பேரின்ப பெருவாழ்வு வாழ வேண்டும் என எழுதி நிறைவு செய்கின்றோம்.

இவண்

அடியார்க்கு அடியேன்

இராம. ஆதிரெத்தினம்

Koviloor Digital Library

511

சிவமயம்

திருமிகு சாத்தாமகன் தமிழ்வேத நாவலர், வைத்தியமணி

சித.வே. சண்முகநாதபிள்ளை அவர்களின்

வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

நூலாசிரியர் மாணவன் புலவர் க. அப்பாராசன்

திருமிகு சிதம்பரம் பிள்ளை அவர்கள் மூலவர்க்கத்தைச் சார்ந்தவர்கள். மருத்துவம், சோதிடம், மாந்திரிகம் ஆகிய கலைகளில் தேர்ந்தவர்கள். சித்தர் ஒருவரிடம் உபதசம் பெற்று அட்டாங்க யோக நெறியிற் சித்திபெற்றவர்கள். சீவ சமாதியடைந்தவர்கள்.

திருமிகு பிள்ளையவர்களின் முன்னோர்கள் மருத்துவம், சோதிடம்,மாந்திரிகம் முதலிய கலைகளில் சிறந்து விளங்கியதோடு திருச்சிலைகளுக்கு அங்கி செய்தல், திருவாச்சியமைத்தல், வெள்ளிப் பாத்திரங்களில் நகாசு வேலை செய்தல் ஆகிய கலைகளிலும் வல்லவர்களாக விளங்கி வந்திருக்கிறார்கள்.

இங்ஙனம் அட்டாங்க யோகநிலையும் கலை நிறைவும் மிகுந்த மரபாக விளங்கியது திருமிகு சிதம்பரத்தார் அவர்களின் மரபு.

அருட்கலைப் பேராளர் தோன்றுதற்கு மரபும், சூழ்நிலையும் நன்முறையில் அமைதல் வேண்டும். தேவகோட்டை நகரப்பெருமக்கள் திருக்கோயில் பெரும்பணியும், திருமுறைத் திருத்தொண்டும் மரபு வழி செய்து வரும் மாண்புடையவர்கள்.

திருமுறைப் பகுதிகளை அச்சிட்டு, திருமண விழாக்களிலும், புதுமைகளிலும் மக்களுக்கெல்லாம் கொடுத்து மகிழும் தன்மையினர். அதுவே அவர்களின் பாங்கும் ஆகும். அத்தகைய பெருஞ்சிறப்புடைய நகரில் வேலாயுதம் பிள்ளையென்னும் பெருந்தகையாருக்கு சாத்தாயியம்மையின் மணி வயிற்றில் நம் கலாநாயகர் தமிழ்வேத நாவலர் அவர்கள் தோன்றினார்கள். பெற்றோர்கள் தம் மகனார்க்கு சண்முகநாதன் எனப் பெயரிட்டு மகிழ்ந்தனர். நம் நாயகரின்

Koviloor Digital Library

உ

சிவமயம்

அன்னையார் குழந்தை வைத்தியத்தில் கொடிகட்டிப் பறந்தவர்கள். அவர்களின் புகழ், தேவகோட்டை நகரிலும், அதைச் சார்ந்த நாட்டுப்புறங்களிலும் ஞாயிறு போல் ஒளிவீசித் திகழ்ந்தது. அருள்நிலையிலும் சிறந்தவர்கள். அவர்களின் நல்வாக்கைப் பெற மக்கள் எதிர்நோக்கியிருப்பார்களாம். அவர்கள் கைப்பட்டாலே குழந்தைகள் நலம் பெறுவர் என்பது மக்களின் நம்பிக்கை.

இத்தகைய பெற்றோர்களுக்கு திருமகனாக நம் கலாநாயகர் சண்முகநாதனார் இராட்சச ஆண்டு ஆவணித் திங்கள் 20ஆம் நாள் (5-8-1915) ஞாயிற்றுக்கிழமை, புனர்பூச நட்சத்திரம், வரியான் நாமயோகம், துவாதசி திதி, கௌலவகரணம் அமரபட்சம் கூடிய நன்னாளில் உதயாதி நாழிகை ҧடயசஇகூஉ தோன்றியிருக்கிறார்கள்.

அவர்களின் சாதகம்

ல வி			செ சனி
	உ ராசி 5-8-1915		சந் கே
ராகு			சூ சு
		மா	பு

செ ச மா	பு		
	உ நவாம்சம்		வி சந் ரா
கேது			சு
		ல	சூ

வியாழ மகா திசை செல்நீக்கி இருப்பு 0-1-23- ருயசா- பெருந்தகையாரின் லக்கினம் மீனம். "மீனத்தானை விடேல் விடேல் என்று மோனத்தார் சொன்னமுறை" என்று நக்கீரர் அருளிய தொடர் மீன லக்கினத்தின் பெருமையை உணர்த்தும். அந்தணராம் மீனத்து வியாழன் ஒன்றுபத்துக்குரியவர் ஆதலின் வேத இயல்பையும் அதன் கூறுபாடுகளையும் விளக்கும் சதுரப்பாட்டுடன் விளக்கிநிறுவியதுடன் மோன நிறைவும் பெற்று ஞானாசிரிய பீடத்துக்கும் உரியவர்

Koviloor Digital Library

ஆகிருர்கள். சந்திரனும் சூரியனும் ஆட்சியாக அமைந்துள்ளமை யோகசாதன சித்திக்கு ஏதுவாகியது.

கன்னியில் புதன் உச்ச, ஆட்சி பெற்றமை கலைகளின் மிகுந்து விளங்கும் உச்சமும், நிலைபேறும் ஆகியவற்றைக் காட்டுவதாக அமைகிறது.

ஐந்தில் சந்திரன் ஆட்சியாய் அமைந்து கேதுவுடன் கூடிநின்றமை பூர்வத்தே ஞானக்கலை நிலைபேருக அமைந்துள்ள பாங்கினை உணர்த்துகிறது.

குரு மீனலக்கினமாளுல் ஒன்று பத்துக்குரியவர். தனுசு லக்கினமாளுல் ஒன்று நாலுக்குரியவர். இத்தகைய நிலைமையுடைய நிறை நலந்தரும் கோள் ஆட்சிபெற்றமை கலைகள் மலிந்த குருபீடமாக அமையும் அருள் வல்லமையைக் காட்டுகின்றது.

குரு ஐந்தாம் பார்வையாகத் தன் உச்ச இடத்தையும் சந்திரனையும் கேதுவையும் பார்த்துள்ள தன்மை ஞான உச்சத்தையும் தம் மாணாக்கர்கள் ஞானஉச்சம் பெறும் நிலையையும் உணர்த்துகிறது. பூர்வத்தும் இவர்கள் உச்சம் பெற்றிருந்தமையை உணர்த்துகிறது. வரும் பிறப்புகளிலும் இவர்கள் உயர்நிலையாம் ஞானம் பெறுவதை விளக்கி நிற்கும். மூன்ரும் இடத்திற்கும் எட்டாம் இடத்துக்கும் உரிய சுக்கிரன் ஆரும் ஆதியாகிய சூரியனுடன் அமைந்து தன்வலிகுன்றியதாலும், ஆரும் ஆதி சூரியன் சிம்மத்திலேயே ஆட்சியாக அமைந்ததாலும் பகையும், பிற நடுக்கந்தரும் செயல்களும் இலகுவாயின.

குழந்தைப்பருவ நிகழ்ச்சி

இரண்டு மூன்று வயதுக் குழந்தைப் பருவத்தில் ஏதாவது காரணம் நோக்கி அழும் போது அன்னை சாத்தாயி அம்மை திருநீற்று மடலை எடுத்து நேரே வைப்பார்களாம். திருநீற்றினை பூசிக் கொண்டு

Koviloor Digital Library

அழுகையை விட்டு மகிழ்வார்களாம். நீர்க்குழாயின் அடியில் வைத்தால் அழுகை நீங்கி மகிழ்வார்களாம். இந்தச் செயல்கள் நம் கலாநாயகர் அவர்களால் என்னிடம் சொல்லப்பட்டதாகும். இவற்ருல் நம் நாயகர் நீராட்டுப் பிரியர் என்பதும், திருநீற்றில் வேட்கையுடையார் என்பதும் பெறப்படும்.

இளமைக்கல்வி

நம் கலா நாயகர் ஐந்தாம் வயது நிரம்பிய போது முறைப்படி திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பட்டார்கள். மிக விரைவில் எழுத்திலும், சொல்லிலும் தேர்ச்சி பெற்றிருக்கிருர்கள். ஏழு, எட்டு வயதுகளிலேயே, திருக்குறள், நிகண்டு முதலிய நூல்களைப் பாராயணஞ் செய்யத் தொடங்கி விரைந்து முடித்திருக்கிருர்கள்.

சித்தர்கள் அருளிய மருத்துவ நூல்களைத் தந்தையார் சித. வேலாயுதம் பிள்ளை அவர்களிடம் ஒவ்வொரு நாளும் படித்துக்காட்டி அவற்றில் எழும் ஐயங்களைத் தந்தையாரிடம் கேட்டு விளங்கிக் கொள்வார்களாம். இங்ஙனம் படிக்குங் காலத்திலேயே பாடல்கள் அனைத்தும் மனத்தில் பதிந்து விடுமாம்.

நம் கலா நாயகர் அவர்கள் மருத்துவ நூல்களைப் படித்து வருங்காலத்திலேயே 'முப்பு முறை' என்னும் அரிய மருத்துவமுறையைப் பற்றித் தம் தந்தையார் பலமுறை சொல்லக் கேட்டிருக்கிருர்கள். அந்த எண்ணம் உள்ளத்தில் வலுப்பட்டு நிற்கவே அயராது ஆய்ந்து பதினைந்து பதினுறு வயதுகளில் முப்பு முறையில், பச்சை வட்டு (பாஷாணம்) வகைகளையெல்லாம், பொடியாகவும், செந்தூரமாகவும், சுண்ணமாகவும் ஆக்கும் நிலையில் தெளிந்திருக்கிருர்கள்.

முப்பு முறை என்பது ஞானியர்கள் மட்டுமே கையாளும் வகையாம். ஆவளியாம் வாசி தம் வயப்படும் நிலையில் உள்ளவர்களே அந்த அரியமுறைக்கு உரியவர்கள். ஏனையோர் செய்யின் பாஷாணப்

Koviloor Digital Library

புகையால் உடலுக்கு ஊறு உண்டாகி மாள நேரிடும். ஆதலின் பிறர் அம்முறைக்கு உரியர் அல்லர்.

முப்பு முறையினுல் பாதரசம் கட்டுப்பட்டு மணியாகும். பாதரசம் கட்டுப்பட வேண்டுமெனில் ஆவளி மூக்கின் வழி வெளியிற் செல்லாமல் சிரத்தின் அமைந்துள்ள பிரமரந்திர வழியில் அதிநுட்பமாக உட்புகுந்து, பிடறி வழியாக மூலத்தில் அமையும்படிச் செய்யும் யோக நெறியாளர்க்கே. அம்முறை எளிதாக அமையும். ஏனையோர் முயற்சி செய்யின் தடைப்பட்டு நலிவர்.

அறுபத்து நான்கு பச்சை வட்டுகளும் (பாஷாணங்களும்) இரண்டு தடவைகளிலேயே பொடி, செந்தூரம். சுண்ணம் ஆகும்படி செய்வது முப்பு முறை. அந்த முறையில் ஐயன் அவர்கள் மருந்து முடிப்பதை நான் நேரிலேயே கண்டிருக்கிறேன். அம்முறையில் செல்லும் அமைப்பு எனக்கு இல்லாமையை உணர்ந்த பெருந்தகையார் அவர்கள், என்னை அந்நெறியின்கண் செல்ல ஊக்கந்தரவில்லை.

முப்பு முறையில் செய்யும் பொடி, செந்தூரம், சுண்ணம் ஆகியவை விரைவில் நோயினை நீக்கும் தன்மையன.

பெருந்தகையார் அவர்களிடம் மருந்துண்ணப் பழகியவர்கள் பிற மருந்துகளைப் பயன்படுத்த மாட்டார்கள். அவர்கட்கு தொடர்ந்து மருந்துண்ணும் தன்மையும் ஏற்படாது.

மருத்துவக்கலையும், சோதிடக்கலையும், வேதவேதாந்த, ஆகமக்கலையும் அவர்களிடம் இயல்பாகவே அமைந்து விளங்கின.

சீதாப்பிராட்டியாருக்குப் பலவகை அழகும் பாங்குற அமைந்து பொலிவுற்று விளங்கியது போல ஐயன் அவர்களிடம் கலைகள் மன்னிப் பொலிவுற்றன.

Koviloor Digital Library

கேட்பவர்கள் அயராது இருப்பின் ஒவ்வொரு கலையின் மாண்பினையும் நீண்ட நேரம் செய்யுளாகவே சொல்லிக் கொண்டே இருப்பார்கள். கலைகளின் இயல்பினைச் சொல்லுவதில் சலிப்படைய மாட்டார்கள்.

கலையைப் பற்றி ஒருமுறை கேட்பினும், பலமுறை கேட்பினும், பலநாட் கேட்டு மீண்டும் கேட்பினும் தலைநாட் கேட்பது போலவே எண்ணி மிகழ்வுடன் கூறும் தகவுடையவர்கள்.

ஒருமுறை அன்பர் ஒருவர் உங்கள் ஐயா அவர்கள் எங்கு கல்வி கற்றார்கள் என்று என்னிடம் கேட்டார்கள். கல்வியின் முழு வடிவமே எங்கள் ஐயா தானே என்று நான் பதில் கூறினேன். கேட்டவர் வியப்படைந்தார்.

திருமிகு ஐயன் அவர்களின் கல்விநிலை, நிலத்திலும் பெரிது, வானினும் உயர்ந்தது. கடலினும் ஆழம் உடையது. திருமிகு சிந்தாமணி ஐயா அவர்களிடம் இலக்கணம் கேட்டிருக்கின்றார்கள்.

தேவகோட்டை சித்தாந்தகலாநிதி பாலகவி ராமநாதன் செட்டியார் அவர்கள் திருமிகு ஐயா அவர்களுக்கு நெருங்கிய நண்பர் ஆவர். சொற்பழுதுரையாத் தூயவன் என்பால் தொடர்ந்த பேரன்பினன் என, நம் நாயகரைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்கள்.

காரைக்குடி வீணை மாமேதை சாம்பசிவ ஐயர் அவர்களிடமும் அவர்களின் திருமகனார் ஆகியோரிடம் இசைமரபுகளை நன்கு கேட்டிருக்கின்றார்கள். தேவாரப் பண்களின் பதிகங்களைப் பாடும் முறையினை ஓதுவாமூர்த்தி ஆறுமுக தேசிகர் அவர்களிடம் முறையாகக் கேட்டுப் பயின்றிருக்கின்றார்கள்.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கெழுமையும் ஏமாப் புடைத்து என்னும் குறட்பாவுக்கு விளக்கமாக நின்றவர்கள் நம்பெருந்தகையார் அவர்கள்.

Koviloor Digital Library

சிவமயம்

குடும்பநிலை

தமிழ் வேத நாவலர் அவர்கள் குடும்பத்தின் மூத்தவர் ஆவர். இவர்களுக்கு தம்பிகள் இருவர். சுப்பிரமணியன், முருகேசன் என்பன தம்பியர்களின் பெயராம். தங்கைகள் நால்வர். தம் சகோதரர்களையும் சகோதரிகளையும் தம் தந்தையார் போலவே பேணி வந்திருக்கிறார்கள்.

இவர்களின் இளவல் முருகேசனார் அவர்கள் இறைவழிபாட்டில் தனிசிறந்து விளங்குபவர்கள். உடன்புறப்புகளையும் பேணும் பொறுப்பு மிகுந்திருந்தமையின் திண்ணைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்புடன் கல்வி பயில்வதை நிறைவு செய்திருக்கிறார்கள்.

நம் நாயகரின் தந்தையார் அவர்கள் வெள்ளிப்பட்டறைத் தொழிலில் மேம்பட்டு விளங்கியவர் ஆவர். அத்தொழிலின் நுட்பங்களை விரைவில் தெரிந்து கொண்டு தந்தையாருக்கு உறுதுணையாக இருந்து வந்திருக்கிறார்கள். அதிநுட்பமான நகாசு வேலைகளில் நம் நாயகர் அவர்கள் தேர்ந்தவர்களாக விளங்கியிருக்கிறார்கள். நகாசு வேலையின் நுட்பப்பயிற்சி பிற்காலத்தில் சிதம்பரச் சக்கரம், நாற்பத்து முக்கோணச் சக்கரம், நவகோணம், அறுகோணம் முதலிய சக்கரங்களைப் போறையாற் செதுக்கி மந்திர எழுத்துக்களைச் சக்கரங்களிற் பொறிக்குந் திறத்தில் தேர்ந்து விளங்க உதவியாய் அமைந்தது.

பெற்றோர்களைப் பேணுந் திறத்திலும், மதிக்கும் பெற்றியினும் நெறிமுறை நிற்கும் நீர்மையராய் விளங்கியிருக்கிறார்கள் நம் கலா நாயகர் அவர்கள்.

திருமணம்

நம் நாயகர் அவர்கள், தம் 18ஆம் அகவையில் தேவகோட்டைப் பகுதியில் உள்ள ஆலங்குடி என்னும் ஊரில் பிறந்து வளர்ந்த மீனம்பாள் என்னும் நங்கையை மணந்து இல்லற வாழ்வினை நேரிய

Koviloor Digital Library

முறையில் நடத்தி வந்திருக்கிருர்கள். இவர்களுக்கு கௌரியம்மாள் என்னும் பெண் குழந்தையும் பின் ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. ஆண்மகவு, குழந்தைப் பருவத்திலேயே இயற்கை எய்தியது. அடுத்து மீனும்பிகையும் இயற்கை எய்திவிட்டார்கள். இந்த இரு சோகநிலையும் ஐயன் அவர்களை நிலைகுலையச் செய்தது.

பெருஞ் சோகத்தின் தாக்கத்தை மாற்றவே தம் துணைவியார் பெயரில் மீனாமிர்தம் என்னும் உயிர்நிலைக்கலை இலக்கணம் என்னும் நூலை செய்திருக்கிருர்கள்.

மீனும்பாள் என்னும் அம்மையார் இயற்கை எய்திய சில திங்களிலேயே குன்றக்குடியில் வாழ்ந்த குமாரவேலுப்பிள்ளை அவர்களின் செல்வப்புதல்வி தெய்வானையம்மையை நம் நாயகருக்குத் திருமணம் செய்து வைத்திருக்கிருர்கள் அவர் தம் பெற்ருேர்கள்.

தெய்வானை அம்மையாருடன் இல்லற நெறியிற் வாழ்ந்த காலத்தில் நான்கு பெண்மக்களும் ஒரு ஆண் மகவும் தோன்றினர். பெண் மக்களில் இருவர் இயற்கையெய்தினர். எஞ்சிய இருவரில் பழநியம்மாள், மற்ருெருவர் செயமங்கைத் தாயார் ஆகியோர் நன்முறையில் குடும்பத்துடன் வாழ்கின்றனர்.

திருமிகு ஐயன் தவத்தின் பேருக ஆண்மகவு தோன்றியது. அதற்குத் திருமூலநாதன் எனப் பெயரிட்டனர் பெற்ருேர்கள். திருமூலநாதனின் இயல்புகளைப் பின்னர்க் கூறுகின்றேன்.

நம் நாயகரின் யோகசாதன நிலை

"தவமும் தவமுடையார்க் காகும்" என்பர் தெய்வப் புலமைத் திருவள்ளுவப் பெருந்தகையார் அவர்கள். முப்பதாம் வயதுக்குள்ளாகவே ஒருவர்க்கு யோக சாதனம் சித்தியாக வேண்டும். முப்பதாம் வயதினைத் தாண்டினுல் யோகநெறி சித்தியாவது கடினம் என்பர் ஆன்ருேர்.

Koviloor Digital Library

முன்னைப் பிறவிகளில் முதுதவம் செய்துவந்த பாங்கு இந்தப் பிறவியிலும் தவத்தில் வேட்கை கொண்டார் நம் தமிழ் வேத நாவலர் அவர்கள் இளமை தொட்டே இவ்வேட்கையில் மிகுந்தவராயினர். திருவைந்தெழுத்தை ஓயாது செபிப்பதில் சிறந்து விளங்கினார்கள்.

திருவைந்தெழுத்தினை இராப்பகல் செபித்தும் உணர்த்தும் வல்லார் தோன்றாமையால் உயிர் விடவே துணிந்திருக்கிறார்கள் நம் தமிழ்வேத நாவலர் அவர்கள். திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி தாம் அளித்த நிவேதனத்தைப் பிள்ளையார் ஏற்று உண்ணாத நிலையில் தம் தலையைக் கல்லில் முட்டப் போகும் போது விநாயகர் நிவேதனத்தை ஏற்று உண்டது போல. பெருந்தகையார் ஒருவர் தோன்றி ஐயன் அவர்களுக்கு உண்மை உபதசத்தை உணர்த்தியிருக்கிறார்கள்.

சற்குரு, உபதசத்தை உணர்த்திய நொடியிலே 'தாள்தந்த போதே தலைதந்த சற்குரு' என்று ஆகம நாயகர் திருமூல தேவர் கூறுமாறு போல ஆவளி (வாசி) சிரத்தின் கண்ஏறி உட்புகத் தொடங்கியிருக்கிறது.

கட்டுப்படாத அச்சுமட்டத்தினைக் கட்டுப்படுத்தித் தலைக்கண் ஏற்றிய போதே வாசிக்குதிரை ஐயனை தூக்கியெறிந்திருக்கிறது.

உபதசம் அளித்த உத்தமர், தாம் வாசிப்பயிற்சியை மேற்கொண்டு, ஐயன் அவர்களுக்கு உலகியல் உணர்வு வரச் செய்திருக்கிறார்கள். அத்துடன் வாசிப்பயிற்சியை நிதானமாகச் செய்தல் வேண்டும். இல்லையேல் தூக்கியெறிவதோடன்றிக் குழியும் பறித்துவிடும் என்று கூறியிருக்கிறார்கள்.

குருதேவர் உணர்த்திய நிலை உணர்ந்த நாயகர் அவர்கள், ஒவ்வொரு நாளும் யோகப்பயிற்சியை முறையாகச் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

Koviloor Digital Library

சாதனப் பயிற்சி முறை

ஒவ்வொரு நாளும் காலை 3.30 மணியளவில் எழுந்து ஒருமைல் தூரம் நடந்து கிணற்று நீரில் குளித்துவிட்டு, மீண்டும் இல்லம் வந்து 5.30 மணிக்கெல்லாம் ஆசனத்தில் இருந்து ஐந்து நாழிகை அதாவது இரண்டு மணிநேரம் நிறையும் வரை பயிற்சி செய்து வருவது அவர்களின் வழக்கமாயிருந்திருக்கிறது.

விளையாட்டில் வெற்றி பெற விரும்புவோர் இடைவிடாது பயிற்சி செய்தல் போல நம் நாயகரும் யோகப்பயிற்சியை இடையீடின்றிச் செய்திருக்கிறுர்கள். தினம் பூஜைக்கு இசக்கியப்பன் மலர் கொண்டு வந்து ஆசி பெறுவார்.

யோக நெறிப்படியாம், நாடி சுத்தி, நாடி தாரணை, வாசி தாரணை, அங்கி தாரணை, அமுத தாரணை ஆகியவற்றில் ஓங்கி, முழுமையின் விளங்கி சற்குருவாம் நிலையெய்தினுர் நம் சண்முகநாதப் பெருமான் அவர்கள். தசவிதநாதங்களையும் கண்ணுகக் கண்டு நெறியின் நிலைக்கும் நீர்மையர் ஆயினுர் நம் தவமுதல்வர்.

மனவாசகங் கடந்த மாண்புறு நிலையினை எய்திய நம் மாதவத்தோர், மனநிலைக்கு வந்து மக்களொடு சாதாரணமாகப் பழகிய நிலையை நினைக்கின்றேன். ஒன்றும் தோன்ருமல் நிற்கின்றேன், மீண்டும் மனநிலைக்கு வந்து எழுதத் தொடங்குகின்றேன்.

நம் கலா நாயகரின் நண்பர்கள்

ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் தக்கவர்களை நண்பர்களாகக் கொள்ளுதல் வேண்டும். இந்தச் செயல் மிக அரிய செயல்களில் எல்லாம் சிறந்ததாகும்.

இதனை "செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு" என்னும் சீரிய குறட்பாவால் திருவள்ளுவப் பெருந்தகையார் விளக்கந் தருகிருர்கள். ஒருவர் தக்காரை நண்பராகக்

Koviloor Digital Library

கொள்ளின் அவரின் வாழ்க்கைக்கு அது சிறந்த பாதுகாவலாக அமையும் என்பதும் இந்தக் குறட்பாவால் விளங்குவதாகும்.

தேவகோட்டை ரெகுநாதபுரம் மேற்குத்தெருவில் வாழ்ந்து வரும் உயர்திரு ஆசிரியர் இராமசாமி அவர்களும், சிவன் கோவில் தெருவிற்கும் அண்மையில் வாழ்ந்த உயர்திரு சண்முக தேசிகர் அவர்களும் திருமிகு நம் கலா நாயகர் அவர்களுக்குச் சிறந்த நண்பர்கள் ஆவர். இவர்கள் மூவரும் இணைபிரியா நண்பர் ஆவர். இவர்களின் மக்கள் வைத்தியர் அப்பா, தேசிகர் அப்பா, வாத்தியார் அப்பா என்றே அழைப்பர். சண்முக தேசிகர் அவர்கள் திருமூல நாதனை தந்தை போல் பேணி வளர்த்தவர் ஆவர். ஒருமுறை நம் கலா நாயகர் தொண்டையின் உட்புறத்தில் சதை வளர்ந்து மிகவும் துன்புற்றனர்கள். அதற்கு வைத்தியம் செய்ய சென்னை அடையாறு மருத்துவமனைக்குச் செல்ல நேர்ந்தது. அப்போது ஆசிரியர் உயர்திரு இராமசாமிப் பிள்ளை திருமிகு ஐயன் அவர்களுடன் சென்று இரண்டு மாதங்கள் வரை அவர்களுக்குரிய பணிவிடைகளைச் செய்து வந்திருக்கிறார்கள்.

உயர்திரு சண்முக தேசிகர் அவர்கள் அவ்வப்போது ஐயன் குடும்பத்தார்களுக்கு ஆறுதல் கூறியும் திருமூலநாதனைப் பாதுகாத்தும், குடும்பத்தார்க்கு வேண்டுவன வாங்கி உதவி புரிந்தும் வந்திருக்கிறார்கள்.

இந்தக் காலத்தில் ஐயன் அவர்களின் நண்பர்கள் இருவரும் புரிந்த உதவி சிறப்புடையதாகும்.

நண்பர்களின் குடும்பத்தார்க்கு நம் கலாநாயகர் அவர்கள் மருத்துவ உதவி புரிந்து வந்திருக்கிறார்கள். சுருங்கக்கூறின் இம்மூவரும் நண்பர்களின் தகவினைத் தரணி மாந்தர்க்குத் தம் அரிய செயல்களின் மூலம் தெளியச் செய்திருக்கிறார்கள் என்றே கூறுதல் வேண்டும்.

Koviloor Digital Library

நம் பெருந்தகையார் குடும்பத்தாருடன் மிகவும் பழக்கம் கொண்ட குடும்பம் அம்மணியம்மாள் குடும்பமும், வீணை மாமேதையார் காரைக்குடி சாம்பசிவ ஐயர் குடும்பமும் ஆகும். ஐயன் அவர்களின் குடும்ப நிகழ்ச்சிகளில் முன்னின்று இரு குடும்பத்தாரும் செயல்புரிவர். தம் குடும்ப நிகழ்ச்சியாகவே அதனைக் கருதுவார்.

தேவகோட்டை நகரப் பெருஞ்செல்வராகிய தமிழ்வள்ளல் உ.ராம.சேவு.மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள் நம் பெருந்தகையாரை பெருஞ்சித்தர் என்றே போற்றிப் புகழ்வார்கள்.

தேவகோட்டை ஜமீன்தார் மரபில் தோன்றிய திருப்பணிச் செம்மல், திருமுறைத் தொண்டர் சோம. நாராயணன் செட்டியார் அவர்கள் நம் ஐயன் அவர்களிடம் கொண்டுள்ள மதிப்பு மிகச் சிறந்ததாகும். பெருஞ்செல்வர் காசிச் செட்டியார், பெருஞ்செல்வர் கைலாசநாதன் செட்டியார் ஆகிய பெருந்தகையார்களெல்லாம் நம் பெருந்தகையைப் போற்றிப் புகழும் பெற்றியர்.

திருமுருக வாரியார் சுவாமிகள் தொடர்ச் சொற்பொழிவாற்ற தேவகோட்டை வந்திருந்த போது சோம. நாராயணன் செட்டியார் அவர்கள், சுவாமி! இன்றைய தினம் நாம் ஒரு மகானைச் சந்திக்கப் போகிறோம் என்றார்களாம். அதற்கு வாரியார் சுவாமிகளும் ஒப்புக் கொண்டார்களாம்.

இரு பெருஞ்செல்வர்களும் பெருந்தகையார்கள் அவர்களின் இல்லத்தை நெருங்கியவுடன் காரினின்றும் இறங்கி, தம்முடைய பொற்றுளத்தை எடுத்து திருப்புகழ்பாடி ஐயன் அவர்களின் கோயில் வீட்டுப் படியேறி, பெருந்தகையார் அவர்களைப் பார்த்து உரையாடி மகிழ்ந்திருக்கிறார்கள். ஐயன் அவர்களின் சாதன நெறி கேட்டும், மருத்துவ முறை உணர்ந்தும் பெருமிதம் எய்தியிருக்கிறார்கள்.

ஐயன் அவர்கள் தாம் இயற்றிய அகத்தியம் என்னும் அருந்தமிழ் இலக்கண நூலை திருமுருக வாரியார் சுவாமிகளிடம்

Koviloor Digital Library

கொடுத்திருக்கிறார்கள். அந்நூலின் மாண்பினை கற்றுணர்ந்த சுவாமிகள், இந்நூலினைக் கற்றார் கரையேறுவர் என்று புகழ்ந்து கூறியிருக்கிறார்.

அஞ்சலகத்துறை அலுவலர்களில் பலர் பெருந்தகை யார்களோடு நெருக்கம் உடையவர்கள். நம்பெருந்தகையார் அவர்களுடன் நெருக்கம் உடையவர்கள் குமரி முதல் இமயம் வரை பரவி இருக்கிறார்கள்.

அருமையில் எளிய அழகர்

பிறவாப்பெருந்திரு அமைந்த ஞானசம்பந்தர் ஆதியாகி சமயப்பெருந்திருவினரும், திருமூலர் முதலாகிய பெருஞ்சித்தர்களும் நம்தமிழகத்தில் தோன்றி, பல ஆண்டுகள் நிலவி அரிய பெரிய பண்நிலாவிய மறைகள் தந்தும் (ஆன்மா) கமம் (நிறைவு) பெறும் ஆகமங்கள் அளித்தும் மக்களை, மன்னுயிர்களைப் பேணிய அருமையாம் பெருமையினையும், அவர்களொடு வாழ்ந்த எளிமையினையும் நினைக்கும் போது மனம் பேதுறுகின்றது.

இருவினையற்றவர்கள், மும்மலங்களின் நீங்கியவர்கள். ஆதலின்; பிறக்க வேண்டிய சூழ்நிலைஇல்லாதவர்கள். அத்தகைய பேராளர்கள் மண்ணுலகில் தோன்றினர். நூறாயிரக்கணக்கில் பண்ணமை பதிங்களைப் பாடியருளினர். ஆயிரக்கணக்கில் ஆகம மந்திரங்களைத் தந்து உதவினர்.

அத்தகைய பேரருள் பிழம்பினர், தம்மை அருநெறிய மறைவல்ல முனி என்றும், மறைஞான ஞான முனிவன் என்றும், முத்தமிழ் விரகன் என்றும் நயப்புற நவின்றனர். என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே. என்று கூறி செம்மாந்தனர்.

Koviloor Digital Library

நம் கலாநாயகரும் அவர்களின் அடிச்சுவடுகளில் ஒன்றி உரம் பெற்று, பல வகையிலும் கலை நூல்களை ஆக்கி மாந்தர் இனத்துக்குத் தந்திருக்கிறார்கள். அவைகளைத் தந்தும் தம்பெருமைத் தாம் அறியாத் தகவுடையவர்களாகப் பழகியமை தான் அவர்களின் அருமையின் எளிமையை விளக்கி நிற்கின்றது.

நல்லவை நாடி இனிமையாகச் சொல்லும் பாங்கில் மிகவும் உயர்ந்தவர்கள். எல்லை நீத்த உலகங்கள் யாவையும் தம்சொல்லினால் சுடும் ஆற்றல் பெற்றிருந்தும் சீதாப் பிராட்டியார் அடக்கமாக இருந்தது போல, தவத்தின் பேராற்றல் மிகுந்திருந்தும், பெருமையாம் அடக்கத்தை அணியாகக் கொண்டவர்கள் நம்கலா நாயகர் அவர்கள் கதம் எனும் பொருண்மை காணுக் கருணையின் கடலாம் இதம் எனும் தன்மையன்றி மற்றோர் ஐயர் இயல்புணர்ந்திலர் இவர்கள் என்னும் கம்பநாட்டாழ்வார் பாட்டுக்கு இலக்கியமாக விளங்கும் பாங்குடையவர்கள். பெருந்தகையார் அவர்களின் உருவம் எளிமையை உணர்த்தும். திருமுகம் தவப்பொலிவின் தண்ணளியை உணர்த்தும்.

மாணாக்கராம் மைந்தர்கள்

இராமநாதபுர மாவட்டம் கானாடுகாத்தான் என்னும் சிறப்புடையப் பேரூரில் பிறந்த, பெரிய கருப்பன் என்பவர் நம் நாயகரின் அன்பிற்கும், மகன் என்று சொல்லும் அளவிற்கு முரியவர் ஆவர். அவர்கள் பெற்றமகனைக் காட்டிலும் திருமிகு ஐயன் அவர்களிடம் அன்பும், பணிவும் கொண்டு பழகியவர்கள். அஞ்சல்துறையில் உயர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று இருக்கிறார்கள்.

அடுத்து திருமுறை ஓதுவார் ஆறுமுக தேசிகர் அவர்களின் புதல்வன் பாலசுப்பிரமணியன் அவர்களும் திருமிகு ஐயன் அவர்களிடம் மாணாக்கராக விளங்கினார்கள். இவர்கள் தேவகோட்டை நகரத்தார் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு

Koviloor Digital Library

பெற்றிருக்கிருர்கள். இவர்கள் திருமிகுஐயன் அவர்களிடம் மருத்துவ நூல்கஊப் பயின்று இன்றும் மருத்துவத்துறையில் பணிபுரிந்து வருகின்ருர். அடுத்து தஞ்சையின் மேல்பால் உள்ள களிமேடு என்னும் ஊரில் பிறந்து வளர்ந்த க. அப்பாராசன் என்பவராகிய யானும் திருமிகு ஐயா அவர்களிடம் மிகவும் அடக்கமாக இருந்து ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் திருமுறை பற்றிய விளக்கம் கேட்டு வந்திருக்கிறேன். தேவகோட்டை ரெகுநாதபுரத்தில் வாழும் உயர்திரு. இராமசாமி பிள்ஊயவர்களின் புதல்வர் இராம. ஆதிரெத்தினம் அவர்கள் திருமிகு ஐயா அவர்களிடம் சிசியனுகப் பாடம் கேட்டு வந்திருக்கிருர். ஆதிரெத்தினம் அவர்கள் தமிழ் ஆகமம் திருமந்திரத்தை நன்ருகக் கேட்டுப் பயின்று வந்திருக்கிருர்கள். திருமந்திரவிளக்கம் சொல்வதிலும் திறமையுடையவர்கள்.

தவநெறிச் சீடர்

மேலே குறிப்பிட்டுள்ள நால்வரும் திருமிகு ஐயா அவர்களிடம் உபதசம், மந்திர உபதசம் கேட்டு முறைப்படி ஒழுகி வருபவர் ஆயினும் தவத்துக்கெனச் சிறப்பாக உரிய மாணவர் திருமிகு சித.வே.முருகேசனுர் அவர்கள் ஆவர். இவர்கள் திருமிகு ஐயா அவர்களின் இஊய சகோதரர் ஆவர். இளமைக் காலத்தே தவத்திற் சிறந்து மனவாசகங் கடந்த நிஊயையெய்தியவர்கள். இவர்கள் தம்மையே மறந்து விடும் நிஊயெய்தியமை உணர்ந்து, இவர்களுக்கு உபதேசம் தந்து மனநிஊயெய்தும்படி செய்திருக்கிருர்கள்.

திருமிகு ஐயன் அவர்கள் தம் இளவலுக்கு உபதசமாம் தாள்தந்த போதே ஆவளியாம் உபதசம் தஊயாம் சிரத்தின் கண்தாவப் பெற்ற நிஊயுடையராகி, சிறந்து விளங்கியிருக்கிருர்கள். இந்நிஊ ஒருசிலர்க்கே வாய்க்கும் தன்மையதாம். இதஊ, தாள் தந்த போதே தஊதந்த சற்குரு. என, திருமந்திரம் விளக்கிக் கூறும்.

Koviloor Digital Library

சிவமயம்

திருமிகு. சித. வே. முருகேசனுர் அவர்கள் புதுக்கோட்டை வடக்கு ராஜவீதியில் 2709எண் இல்லத்தில் நமசிவாயம் சித்த வைத்தியசாலை அமைத்து மருத்துவத்துறையில் சிறந்து விளங்குகின்ருர்கள். இவர்கள் நீரூற்று நிபுணர் என்னும் பட்டம் பெற்று, அந்தத் துறையிலும் சிறந்து விளங்கி வருகிருர்கள். இவர்களுக்கு, அரசியலில் சிறந்து விளங்கும் அலுவலர்களும், பேராசிரியர்களும், அன்பிஇனயுடையார் பலரும் மாணவராகி உயர் சிறப்பிஇனப் பெற்று வருகிருர்கள். திருமிகு. சித. வே. முருகேசனுர் அவர்கள் திருமிகுஜயன் அவர்களால் தோற்று விக்கப்பட்ட முத்தமிழ் வேதத்திருச் சபையைச் சீரிய முறையில் நடத்தி வருகிருர்கள். தவம் என்பது இவர்கள் முன்ஞேர்களின் பிறவிச் சொத்தாகவே விளங்கி நிற்கின்றது.

இவர்களின் தவநிஇல எதிர்காலத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கும்.

புதல்வர்

திருமிகு ஐயா அவர்களுக்கு தெய்வாஇன அம்மையார் திருவயிற்றில் மூன்ருவதாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்குத் திருமூலநாதன் என்று பெயரிட்டு வளர்த்தனர். திருமூலநாதன் இளமையிற் கல்வியிற் சிறந்து வருவாராயினர். சிறுவராக இருக்கும் போதே மிகப் பெரிய நச்சுடைய நல்ல பாம்புகஇளப் பிடித்து நிமிர்த்தி மகிழ்வது இவரது இயல்பாம். இவர் பாம்பைக் கையில் பிடித்துப் பெருமிதத்துடன் தெருவில் செல்லும் போது, என் மகன் சித்தநாதன், தானே பாம்பைப் பிடித்துச் செல்லுவது போல் இறுமாந்து செல்வான். திருமிகு ஐயன் அவர்கள் இப்படிச் செய்யக் கூடாது என்று சொல்லும் போது, அப்பு ! பாம்புகளே எங்கஇளப் பிடி என்று சொல்லுகின்றன. அதனால் பிடிக்கின்றேன் என்று சொல்லுவார்

தமிழில் முதுகஇல (M.A.) பட்டம் பெற்றவர்கள். கல்வி பயிலுங் காலத்தே நம் கலாநாயகர் கூறுங் கருத்துகஇளப் பேராசிரியர்களிடம் கூறி பெருமதிப்பைப் பெற்றவர்.

Koviloor Digital Library

தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணுமலைக் கலைக் கல்லூரியில் சிலகாலம் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்திருக்கிருர்கள். ஞான தத்துவ நூல்களைச் சிறப்பாக விளக்கும் ஆற்றல் உடையவர். தொல்காப்பிய எழுத்ததிகாரம் என்பால் பயின்றவர்.

நாங்கள் இருவருமே சைக்கிளில் செல்லும் போது திடீர் என இறங்கி, ஒரு விரியன் பாம்புக்குட்டியைப் பிடித்துத் தூக்கி, நேரே நில் என்று சொன்ஞர். அந்தப்பாம்பும் வளையாமல் நேரே நின்றது. அதற்கு உண்மை உபதசம் செய்தார் இதை நேரே பார்த்தேன் நான்.

தம் தந்தையார் உடல்நலம் குறைந்த போது, மருத்துவத்தொழிலையும் பார்த்துவந்தார். தந்தையார் வழியே முப்புமுறையில் செந்தூரம், சுண்ணம் பொடி ஆகியவற்றைச் செய்து வந்தார்.

பெருஞ்செல்வந்தர் எல்லோரும் இவர்களிடம் மருத்துவம் பெற்று விரைவில் நோய் நீக்கம் பெற்றனர். மிகச்சுருங்கிய காலத்திலேயே மருத்துவத்துறையில் கொடிகட்டிப் பறந்தார். பச்ச வட்டுப் புகைக்கு ஈடு கொடுக்க முடியாமல் கிட்னிகள் இரண்டுங் கெட்டு இயற்கை எய்திஞர். இவரை மருத்துவத்துறை அபி மன்னன் என்றே சொல்ல வேண்டும்.

முறையே பாடங்கேட்ட மாணவர்கள்

திருமுறை ஓதுவா மூர்த்திகள் திரு ஆறுமுக தேசிகர் அவர்களும் நானும் திருமிகு ஐயா அவர்களிடம் முறையே பாடங்கேட்டு வந்தோம். ஐயன் அவர்களிடம் நாங்கள் பாடங்கேட்கும் போது, யார் வந்தாலும் வருகிறேன் என்று விலகிச் சென்று விடுவார்கள். ஐயன் அவர்களும் எங்களுக்குப் பாடஞ் சொல்லுவதையே தலையாய பணி என்று கருதுவார்கள். காலவரையறை கருதாது பாடஞ் சொல்லுவார்கள். நாங்களும் மிகுந்த ஆர்வத்துடன் கேட்போம். திருமுறையைப் பற்றி பாடம் சொல்லும் போது மருத்துவம், சோதிடம், தத்துவம் முதலிய கலைகளில் இருந்து மேற்கோள் காட்டும் போது இருவரும் இனமறியா

Koviloor Digital Library

இன்பத்தில் ஆழ்ந்து விடுவோம். அந்த நிலை சொல்லுந் தரத்தன்று திருமிகு ஐயன் அவர்கள் பாடம் சொல்லும் போது தெளிவு பிறக்குமன்றி, மயக்க நிலை தோன்றுது. தேசிகர் ஐயா அவர்கள் நுட்பமான வினுக்களை அடிக்கடி கேட்பார்கள். அவற்றிற்கெல்லாம் மிகமிக எளிமையாக விளக்கந் தருவார்கள் நம் நாயகர். இந்தக் கேள்விக்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் பார்ப்போம் என்று தேசிகர் ஐயா கேட்பார்கள். சிரித்துக் கொண்டே மிகவும் நயமாகப் பதிலிறுப்பார்கள். இவ்வாறு பாடங் கேட்கும் முறை நாளுக்கு நாள் வேட்கையை மிகுதிப்படுத்திக் கொண்டே இருக்கும்.

பெருந்தகையார் விளக்கஞ் சொல்லும் போது தஞ்சைப் பெருமக்களின் இசை ரசிகத் தன்மை என்னையறியாமல் மிகவே, ஆகா! சரி தான் ஐயா! என்று சொல்லுவதோடு ரொம்ப சரி! என்றும் சொல்லி விடுவேன். அதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்.

திருமிகு ஐயா அவர்கள் பாடம் சொல்லும் பாங்கை ஒலி நாடா செய்திருக்கிருர்கள். அதில் நான் ரசித்துச் சொல்லும் சொற்களும் இருக்கும்.

ஒருமுறை தகுந்த முறையில் விளக்கஞ் சொல்லும் போது அலறி அழுது விட்டேன். சற்று நேரஞ் சென்ற பிறகு எவ்வளவு கேட்டாலும் மனம் நெகிழ்ந்து விடக் கூடாது. அழுத்தமாக இருக்க வேண்டும் என்ருர்கள். ஐயன் அவர்கள் இவ்வாறு சொல்லலாம். கேட்கும் என் நிலை அவ்வாறு இருக்க முடிவதில்லை.

திருமிகு ஐயன் அவர்கள் ஒடுக்கங் கண்டபின்பும், அவர்களிடம் பாடங் கேட்கும் ஆசை, வேட்கை இன்னும் தணியவில்லை. தஞ்சாவூரு மண்ணெடுத்து தாமிரபரணி தண்ணியெடுத்து சேர்த்து சேர்த்து செஞ்சதிந்த பொம்மை, பொம்மையல்ல பொம்மையல்ல உண்மை என்று திரைப்படக் கலைஞர் பாடியது போன்று ஒவ்வொரு கலையிலும் ஆழ்ந்து பொருளின் நுட்பத் தொடரை எல்லாம் ஒருங்கு சேர்த்து

Koviloor Digital Library

உருவகமாக்கித் தந்த பாங்கினை என்ன சொல்லிப் புகழ முடியும். வியக்க முடியும் ?

ஒவ்வொரு நொடியையும் பொன்னுகக் கருதி செயலில் ஈடுபடும் ஒருவர் மற்ருெருவருக்கு பொன்னைத் தரலாம். பொருளைத் தரலாம். காலத்தைத் தர ஒருப்படார். ஐயன் எனக்காகத் தந்த காலத்தை வரையறுத்துக் கூற இயலாது. ஒவ்வொரு நாளும் பாடஞ் சொல்லிய காலத்தைக் குறித்து வைத்திருந்தால் அது வருடக் கணக்கில் நீளும்.

ஐயன் எனக்காக உலகில் உடற்பொறை தாங்கி இருந்த ஆண்டுகளை எண்ணிப் பார்க்கின்,

> ஒய்விலாதன உவமனில் இறந்தன ஒண்மலர்த் தாள் தந்து
> நாயிலாகிய குலத்தினும் கடைப்படும் என்னை நன்னெறி காட்டி
> தாயிலாகிய இன்னருள் புரிந்த என் தலைவனை நனிகாணேன்
> தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே

என்ற திருவாசகப் பாடலை எண்ணி நெகிழ்கிறேன்.

என் செல்வப் புதல்வன் இராம. ஆதிரெத்தினத்திற்கு இதைவிடக் கூடுதலான நிலை பெருகுமன்றி உணர்வு குறையாது.

பொன்னுக்கோ, பொருளுக்கோ வரையறை உண்டு உண்மைக் கலைக்கு என்ன வரையறை செய்யு முடியும் ?

கணையாழி தந்து உயிரைத் தந்த அனுமனுக்குச் சீதாப் பிராட்டியார் "நோய் நொடியின்றி எல்லையில் ஆயுளை யடைதிநீ என்று கருணையுடன் கூறினர்கள். அனுமனின் மேம்பட்ட ஆற்றல் உடைமையின் சீதாப்பிராட்டியார் அனுமனுக்குப் பரிவுடன் வாழ்த்து அருளினர்.

நானும் எம் செல்வப் புதல்வன் இராம. ஆதிரெத்தினமும் திருமிகு ஐயன் அவர்களுக்குப் புத்திரராம் நிலையுடையவர்கள் ஆதலின் வணங்கிக் கொண்டே இருக்கின்ருேம்.

Koviloor Digital Library

திருமிகு ஐயன் அவர்கள் துன்புற்ற நிலையினும், துயர் மிகுந்த காலத்தும் பாடம் சொல்லுவதில் தவறியதில்லை.

பெருந்தகையார் அவர்களின் பெண் குழந்தை இயற்கையெய்தியது. நான் வெளியூர் சென்றிருந்திருந்ததால் அன்றைய நாள் செல்ல முடியவில்லை. மூன்று நாட்கள் ஆனபின் சென்றேன். ஐயன் அருகில் வருத்தத்துடன் அமர்ந்தேன். பக்கத்தில் அவர்களின் மாமனுர் மற்றும் உறவினர் பலர் அமர்ந்திருந்தனர். திருமிகு ஐயன் அவர்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய கொல்லிப் பண்ணிற்கும் கொல்லிக் கௌவாணத்திற்குமுரிய மேற்கணக்குக்குத் தாம் எழுதிய அட்டவணையை எடுத்து எனக்கு விளக்கஞ் சொல்கிருர்கள். எந்த நேரத்தில் சொல்கிறேம் என்ற தன்மையை அறியாமலேயே இயல்பாக எப்போதும் சொல்வது போலவே சொல்லத் தொடங்கினுர்கள்.

கலைச்சிகர விளக்கமாகிய அந்தப் பகுதி மிகவும் நீண்டே சென்றது. அருகில் இருப்போர் என்னைப் பார்ப்பது எனக்குப் புரிகிறது. எங்கள் ஐயன் சொன்னபடியே மாருமல் நடப்பவன் நான் என்பது அவர்களுக்குப் புரிய நியாயமில்லை. கொஞ்சம் பார்த்தனர். நொடியில் அடங்கினர்.

கொல்லி என்பது பாம்பு. அது காய்ந்து சீறும். விளமாய்த் தீண்டும். பூத்தென சீறிப் பொலிய படம் எடுத்து ஆடும். இந்தத் தன்மையை காய்ச்சீரும், விளச்சீரும், பூச்சீரும் இயைத்துப் பாடுவது கொல்லிப் பண்ணின் இலக்கணம்.

இந்தத் தன்மையொடு பாம்பானது மா என்னும் வண்டினைக் கௌவ நெருங்கும் தன்மையை விளக்க காய்ச்சீருக்கு முன் மாச்சீர் அமையப் பாடுவது கொல்லி + கௌவ + அணம் ஆகும். அது கொல்லிக் கௌவாணம் ஆயிற்று என விளக்கந் தந்தார்கள். இத்துடன் நிறுத்தவில்லை எங்கள் ஐயன்.

Koviloor Digital Library

கொல்லிப் பண்ணிலும், கொல்லிக் கௌவாணப் பண்ணிலும் சிதம்பரச் சக்கரம் அமையப் பாடியிருக்கின்றார் நம்பியாரூரர் (சுந்தரமூர்த்தி சுவாமிகள்) என்றார்களே பார்க்கலாம். அச்சடித்த பதுமை போல் ஆகிவிட்டேன் நான்.

ஐயன்மீர்! ஐயா! இந்தப் பரிதாபமான கட்டம் யாருக்கு வரும் ? யாருக்கு வாய்க்கும்?

சிதம்பரச் சக்கரத்தின் வரைபடமும் அந்தச்சக்கரத்துள் அமைந்திருக்கும் மந்திரமும் அமைந்திருக்கும் நிலையைக் காட்டி விளக்கந் தந்தருளினார்கள்.

பெருந்தகையார் தந்த விளக்கம் எனக்கு வியப்பைத் தந்தது. மகிழ்ச்சியைத் தரக்கூடிய நேரமில்லை அது.

தேவாரத் திருமுறைப் பண்களில் உள்ளீடாகச் சக்கரமும் மந்திரமும் அமைந்திருப்பதை எண்ணிப் பார்க்கும் அறிஞர்களுக்கு உவப்பொடு வியப்பும் மிகும் என்பதில் ஐயமில்லை. நாற்பத்து முக்கோணம், சிதம்பரம் இன்னும் பிற இன்றியமையாச் சக்கரத்தைப் பற்றி விளக்கஞ் சொல்லவோ, நடைமுறைப்படுத்தவோ உரிய உரிமை அருள்நிலை வல்லார்க்கே உரியதாம்.

திருமிகு ஐயன் அவர்கள் செய்த நூல்களும் அரங்கேற்றமும்

ஆசை என்பது ஆருயிர்க் கணங்களைப் பற்றிய படலமாகும். எப்படியோ உயிர்களைப்பற்றி அவைகளை ஆட்டுவிக்கும் நடன நாயகனை அது விளங்குகின்றது. இன்பமாகிய உணர்வு எங்ஙனம் எல்லா உயிர்களுக்கும் இயல்பாக அமைந்தவொன்றோ ? அது போலவே ஆசையும் உயிர்களை இயல்பாகப் பற்றியவொன்றாம்.

உயிரினங்களுக்குத் தக்கவாறு ஆசை ஏற்றமும், இறக்கமும் உடையதாக அமையும். உலக மக்களின் ஆசை பொன்னிலும்,

Koviloor Digital Library

பொருளிலும் போகந்துய்க்கும் நிலையிலும் நிலையற்றதாய் நீளும். உலக மாந்தரின் ஆசை நீளினும் அகன்று செல்லினும் எப்படியோ அதற்குரிய கருவி கொண்டு வரையறைப்படுத்தலாம்.

அகண்டா காரமென்னும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பி ஏகவுருவாய்க் கிடக்குதையோ
சேர வாரும் செகத்தீரே

என்று கூவி மக்களை அழைக்கும் அருட்பெரு ஞானியரின் ஆசையின் அளவினை யாங்ஙனம் வரையறை செய்ய இயலும்.

என் ஆத்தாள் உமையம்மை பொற்கிண்ணத்தில் கறந்து அளித்த ஞானப்பாலை அளவின்றிப் பருகிய பின்னரும் ஞானசம்பந்தர் பாடிய பல்லாயிரக்கணக்கான பதிகங்களும்,

தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றுரெண்பது அடியார்கள் நடுவிருந்து பெருமான் வாதவூரருக்கு உபதசத்தொடு ஞானமும் நல்கிய பின்னர் பாடிய திருவாசகப் பாடல்களும், திருநாவலூரில் நம்பியாரூரரின் திருமணம் நிகழ வொட்டாது தடுத்து ஆட்கொண்டு வெண்ணைநல்லூரில் வியத்தகு காட்சி கொடுத்த பின்னர் பாடிய பண்ணுர் பதிகங்களும் மாநிலத்தார் மயக்கத்தையெல்லாம் தீர்க்குமருள் நீக்கியாருக்கு கூற்றன்ன கொடுஞ் சூலை நோயினை நீக்கி நாவுக்கரசென நின் நாமம் ஏழுலகினும் நயப்புற மன்னுக என்று அருளிய பின்னர் பாடிய பல்லாயிரக்கணக்கான பதிகங்களும் ஆசையால் விளைந்தவையாயினும் இரண்டுக்கும் வேறுபாடு உண்டு.

பெருந்தகையார் அவர்கள் "எண்ணிலியாகிய சித்திகள் வந்தெனை எய்துவதாகாதே" வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம் மிகுந்திடுமாகாதே என்ற நிலையெய்திய பின்னும் நூல்கள் யாக்கும் ஆசையில் மிகுந்தவர் ஆனுர்கள். சிவநெறி தழுவும் பெரியார்கள் நால்வரும் மக்கள் மீது கொண்ட கருணைப் பெருக்கால் திருமுறைப் பெருநூல்களைப் பாடியருளினர்.

Koviloor Digital Library

மக்கள் நலம் விரும்பிய கருணையே திருமுறைகள் பாடியருள ஆசை கொண்டதற்குக் காரணம் ஆகியது. அதுபோலவே ஐயன் நூல்கள் செய்ய ஆசை கொண்டதும் மக்கள் மீது கொண்ட கருணையே ஆகும்.

உயிர்நிலைக்கலை இலக்கணம்

உயிர்நிலைக்கலை இலக்கணம் என்னும் இந்த இலக்கணநூல் மருத்துவப் பகுதியைச் சேர்ந்ததாகும். இந்நூல் மண், நீர், கல், சூரியன், சந்திரன், தீ, வெளி, ஒளி, இருள் ஆகியவை ஒன்பதாக விளங்குமாப் போல் உலகில் உள்ள சரப் பொருள், அசரப் பொருள்கள் அனைத்தும் ஒன்பதாக விளங்குகின்றன என்பதனை பெருந்தகையார் அவர்கள் விளக்குகின்றார்கள். எழுகோடி மந்திரங்கள், இறையின் உருவப் பெயரின் நிலைகள், மருந்துப் பொருள் வகைகள் அனைத்தும் ஒன்பதாக விளங்குகின்றன என்பதனைத் தெளிவாக இந்நூலின் கண் விளக்குகின்றார்கள்.

இந்த அரிய இலக்கண நூல் சித்த மருத்துவப் பட்டப் படிப்பில் ஈடுபடுவார்க்கு சிறந்த முதல் இலக்கண நூலாக அமையும் என்பதில் ஐயமில்லை. மருத்துவச் சான்றோர்கள் பலரும் பிற துறை அறிஞர்களும் இந்த இலக்கண நூல் மருத்துவத் துறையில் பயில்வார் அனைவர்க்கும் பாடநூலாக அமையச் செய்ய வேண்டும்.

தொல்காப்பியப் பெருந்தகையார் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களையும் ஒவ்வொன்றிற்கும் ஒன்பது இயல்புகளாகப் பகுத்திருப்பதும் ஈண்டு நோக்கத் தக்கதாகும்.

இந்த அரிய இலக்கண நூலும், ரோக நிவாரணத் தொகுதி என்னும் பதார்த்த குண விளக்க நூலும் விய வருடம் புராட்டாசி மாதம் 25ஆம் நாள் (13-10-1946) மதுரையில் நடந்த இந்திய சித்த வைத்திய இரண்டாவது மாநாட்டில் சித்த மருத்துவப் பேரறிஞர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டன. உயிர்நிலைக்கலை

Koviloor Digital Library

இலக்கணமாம் இந்நூல் பூத பௌதீக நெறி ஆய்வாளர்களுக்கு மிகவும் பயன்படுவதொன்ரும்.

உயிர்நிலைக்கலை இலக்கணப் பாயிரப் பகுதி.

இறை வணக்கம்

அகர முதலாய ஐம்பத் தொரு வகை யாஞ்சரமும்
மிகவொளி யாகு மிரவி மதியு மிதனுறவு
மிகவரு மேழுமுண் டாக்கி யடக்கு மியல் புடைத்தாம்
தகவுரு மூலப் பொருளை நலமுறச் சாருவமே.

இந்தச் செய்யுள் கட்டளைக் கலித்துறையாகிறது. இதன்கண் மூலத்தில் தோன்றும் ஆவளி, நாதாந்தம் ஆகிய ஏழு நிலையங்களுக்குள் ஐம்பத்தொரு வகை எழுத்தாகத் திகழ்கிறது. (இது அகத்தியமுறை பற்றியவொன்ரும்) மிகவும் ஒளியைத் தருகின்ற சூரியனும், சந்திரனும் இவற்றின் உச்ச, ஆட்சி, நீச்சத் தன்மையால் உண்டாகும் ஏனைய ஏழு கோள்களையும் உண்டாக்கி அடக்கும் இயல்பையுடைய மூலப்பொருளை நலம் பெறும் பொருட்டுச் சார்ந்து ஒன்றுவோம் என்று கூறுகின்ருர்கள்.

ஐம்பத்தொரு வகை எழுத்து என்பது உலக மொழிக்கெல்லாம் பொதுவாம். ஆவளி சூரியன் என்னும் பின் கலையாகவும், சந்திரன் என்னும் இடகலையாகவும் சொல்லப் பெறும்.

இவற்றின் சேர்க்கையால் வரும் எழுவகையாவன : சூரியனுகிய மனம், சந்திரனுகிய புத்தியை உச்ச பலத்தால் கூட துணிவு என்னும் செவ்வாய் தோன்றுகின்றது.

சந்திரனுகிய புத்தி, சூரியனுகிய மனத்தை சுவாப் பலத்தால் (இயல்பாகிய) தன்மையாற்கூட நுட்பம் என்னும் புதன் தோன்றுகின்றது. சூரியன் என்னும் மனத்தின் நீச்சம் என்னும் குற்றத்தால் மறதி என்னும் சனி தோன்றுகின்றது. புத்தி என்னும்

Koviloor Digital Library

சந்திரனின் நீச்சத்தால் மயக்கம் என்னும் ராகு தோன்றுகின்றது. சூரியன் என்னும் மனத்தின் நீசம் என்னும் குற்றமாகிய மறதி என்னும் சனியும், சந்திரன் என்னும் புத்தியின் நீசம் என்னும் குற்றமாகிய மயக்கம் என்னும் இராகுவும் உச்சத்தாற் கூட நூதனம் என்னும் குரு தோன்றுகின்றது.

மறதி என்னும் சனி மயக்கம் என்னும் இராகுவைக் கூட களிப்பு என்னும் சுக்கிரன் தோன்றுகின்றது. இவற்றிற்கெல்லாம் ஆதாரமாகிய கேதுவும் தோன்றுகின்றது என்ற இவை பெருந்தகையார் அவர்களே கூறிய உரை விளக்கம் ஆகும்.

இவற்றிற்கெல்லாம் விளக்கம் தனியாகக் கூற வேண்டும்.

அடுத்து இராமாயண இலக்கியம் என்னும் நூல் திருமிகு ஐயன் அவர்களால் ஆக்கப் பெற்றதாகும். இந்த அற்புத இலக்கியத்தில் உயிர் உடலைப் பெற்று மனம் வாயு தோன்றிய நிலையிலிருந்து அது நிறைவாம் ஞானம் பெற்று இறையை ஒன்றும் வரையிலுள்ள சீவன் என்னும் சிவரகசியத்தைக் கூறும் நூல்.

இம்மாபெரு நிலையமைந்த நூலை தேவகோட்டைக் கருதாவூருணியின் மேல் பால் அமைந்த பிள்ளையார் கோவிலின் தென்புறத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் அன்பர்களுக்கு திருமிகு ஐயன் அவர்கள் விளக்கம் சொல்லி வந்தார்கள். வாரந்தோறும் நானும் தவருமல் கேட்டு வந்தேன். ஐயன் அவர்கள் இதற்கு நீங்கள் உரை எழுதுங்கள் என்று கூறினுர்கள். அவர்கள் பொன்னுன வாக்கு இராமாயண இலக்கியத்திற்கும் உரை எழுதும் வாய்ப்பை உண்டாக்கும்.

தேவகோட்டை நகரத்தார்களில் சிறந்தவருள் ஒருவராகிய உயர்திரு. முத்தையா செட்டியார் தங்கையின் குமாரரும், உயர்திரு. சிதம்பரஞ் செட்டியாரின் குமாரரும் ஆகிய சித. ஏகப்பன் அவர்களிடம் இராமாயணத்தை நீ அச்சிட வேண்டும் என

Koviloor Digital Library

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஐயன் அவர்கள் சொல்லியதை நினைவிற் கொண்டு இந்த பிரமாதி வருட முத்தமிழ் வேதத் திருச்சபை 22ஆம் ஆண்டு விழாவின் போது ரூபாய் பதினைந்து ஆயிரத்திற்குரிய காசோலையை என் செல்வப் புதல்வன் இராம. ஆதிரெத்தினத்திடம் கொடுத்து சபையின் ஆண்டுவிழாச் செலவுக்கும் ரூபாய் ஐந்நூறும் கொடுத்துள்ளார்கள். நகரத்தார்கள் எதையும் நினைவிற் கொண்டு செய்யும் பாங்குடையவர்கள் என்பதனை வச்சிரப்படுத்தியுள்ளார்கள் திரு. சித. ஏகப்பன் அவர்கள். திருமிகு ஐயன் அவர்கள் எழுதியுள்ள கரண இலக்கணம் என்னும் எண் இலக்கண நூலுக்கு நான் எழுதிய உரை விளக்கத்தையும் உயர்திரு. மு.வீ. செம்பொன் அருணைசலம் செட்டியார் அவர்கள் அச்சிடுவதாக ஒத்துக் கொண்டார்கள். அதன்படியே கரண இலக்கணத்தை மிகுந்த பக்தியோடும் சிறப்போடும் வெளியிட்டார்கள். திருமிகு ஐயன் அவர்கள் நிறைமொழி மாந்தர் ஆதலின் அவர்களின் நினைவும், சொல்லும் காலத்தே நிறைவேறி வருகிறது. அடுத்து முத்திநெறி இலக்கணம் என்னும் உயர்நூலை ஆக்கித் தந்துள்ளார்கள் பெருந்தகையார் அவர்கள், உலக இன்ப நிலையினைக் கூறும் அகத்துறை தொடர்பான இலக்கியங்களையும் இலக்கணத்தையும் படித்து மகிழும் தன்மையில் விருப்பம் இல்லாத மக்கள் முத்திநெறியைப் பற்றியா கவலை கொள்வார்கள் எனப் பலரும் நினைக்கத் தோன்றும். அவ்வாறு நினைப்பதும் இயல்பாம்.

மகாப் பெரிய ஞானியர்களும், நன்புலச் சான்றோர்களும் முத்திநெறியின் மேம்பாட்டினை உயர்நிலையின் உச்சம் என்றே போற்றியிருக்கின்றார்கள்.

ஆலால சுந்தரர் என்னும் நம்பியாரூரார் முத்தியை அடைந்தவர்களில் அறுபத்து மூவர்களைத் தாம் பாடிய திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தில் பாடியுள்ளார்கள்.

Koviloor Digital Library

அதனை வகை செய்தார் நம்பியாண்டார் நம்பிகள் விரிவாக விளக்கிப் பாடினர்கள் அருட்காவிய வேந்தராம் சேக்கிழார் அடிகள்.

முத்திநெறி என்பது அறுபத்து மூன்று வகைக்குள்ளே அடங்கும் என்று வரையறுத்து இலக்கணம் செய்துள்ளார்கள் நம் கலா நாயகர் அவர்கள். தெளிந்த நிலையில் நூல் யாப்பதே ஐயன் அவர்களின் பாங்காம். தத்துவம் தொண்ணூற்றாறும் தனித் தனியாகவும் தொகுப்பாகவும் கண்டு அமைக்குங் காலத்து அவை அறுபத்து மூன்ருகவே அமைகின்றன.

அவற்றில் ஒன்றினை நீக்கி இறைவன்பால் பக்தி கொண்டால் அது முத்தியைத் தரும் என்பதனையே பெருந்தகையார் முத்திநெறியிலக்கணத்தில் விளக்கியிருக்கின்ருர்கள்.

தன் மனைவியார் சொன்ன சூளுரையை நன்கு உள்வாங்கிக் கொண்டு, காமம் என்னும் இளமைப் பேருணர்வை நொடியின் விட்டு நீங்கினர் திருநீலகண்டர். "வென்ற ஐம்புலனுல் மிக்கீர்" என்னும் பாராட்டின் உச்சத்தை இறைவனுரால் பெற்ருர்.

"மாது சொன்ன சூளால் இளமை துறக்கவல்லேன் அல்லேன்" எனப் பட்டினத்துப் பிள்ளையாரும் பாராட்டுகின்ருர்கள்.

இன்றும் இளமையோடு கைலையில் இருவரும் இன்பத்தோடே இருக்கின்ருர்கள் என்பது ஆன்ருேர்களின் உரனமை கோட்பாடு.

இங்ஙனமே இராக தோடங்கள் ஏனைய ஏழில் ஒவ்வொன்றினையும் விட்டு முத்தியடைந்தவர்களைத் தொடர்ந்து பாடுகின்ருர் நம்பியாரூராம் நம் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

முத்தி நெறி இலக்கணத்திற்கு விளக்க உரை தரும் வாய்ப்பு நேரின் ஏனையவற்றையும் விளக்குவாம்.

இந்த அரிய முத்திநெறி இலக்கணம் என்னும் நூல் மதுரை மீனுட்சியம்மன் கோவிலின் கண் உள்ள நாற்பத்தொன்பதின்மராம்

Koviloor Digital Library

புலவர் சந்நிதியில் அரங்கேறியது. இந்நூல் அச்சாகவும், அரங்கேறவும் பெரும் முயற்சி செய்தவர்கள் தவத்திரு காசிவாசி நடேசானந்த சரஸ்வதி சுவாமிகள் ஆவர். இந்தநூல் சவுமிய ஆண்டு தைத்திங்கள் 24ஆம் நாள் சதய நட்சத்திரங் கூடிய நல்ல வேளையில் அரங்கேறியது. ஆன்றோர்களின் பெருந்தவமும், மக்களின் வேண்டுதலும் என்றும் வீண் போனதில்லை. எக்காலத்தும் அவை நிறைவேறியே வருகின்றன.

மக்களின் வேண்டுதலும், ஆன்றோர்களின் பெருந்தவமுமே உலகில் சைவ சமயப் பெரியார்கள் நால்வரும் தோன்றக் காரணமாய் அமைந்தன.

நால்வருள் ஞானசம்பந்தப் பெருமான் பாஞ்சராத்திரம் பஞ்சரம் + திரம் என்ற சொற்களே பாஞ்சராத்திரம் என்றுயின. அதாவது உயிர் இந்த உடலை பஞ்சரம் (கூடு) என்றே திரமாக எண்ணியமை, வைக + நேயம் என்பன வைகாநசம் என்று புணர்ந்தன. இவ்விரண்டும் ஆகமங்கள். இந்த இரண்டொடு பிரணவமறை, நான்மறை, ஆறங்கம், வேதாந்தம், அத்துவித சித்தாந்தம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை ஆகிய அனைத்தையும் மறை நெறி வழுவாமல் பண்ணிலும் திறத்திலும் பாடியிருக்கின்றுர்கள்.

இத்தகைய நவமணிப் பெருங்குவியலைத் தம் ஞானத்தெளிவின் முதிர்வால் உணர்ந்த எம் பெருந்தகையார் திருமுறைப் பெருநூல் விளக்கம் என்னும் அற்புதம் பொலி பொற்புறு பேழையை இந்த ஞாலத்திற்கு யாத்து உதவி இருக்கிறுர்கள்.

மாமன்னர் சிம்மமாம் இராஜ இராஜ பூபதி அரசோச்சிய காலத்தில் எங்கள் ஐயன் தோன்றி நவநிதிக் குவியலாம் திருமுறைப் பெருநூல் விளக்கம் என்னும் இந்த அற்புத மணிப்பேழையைத் தந்திருப்பின் எந்த நிலையில் தஞ்சைத் தரணி இருந்திருக்கும் என்பதனை யாரே கூற வல்லார்? தஞ்சைத் தரணி சங்கீதக் கோட்டையாய்ப் பொலிந்திருக்கும்.

Koviloor Digital Library

உ
சிவமயம்

திருமுறைப் பெருநூல் விளக்கப் பகுதியை காலம் வாய்க்கும் பொழுதெல்லாம் ஓதுவார் மூர்த்திகள் ஆறுமுக தேசிகர் அவர்களும், களிமேடு அப்பர் பெருமானின் அடித்தொண்டனுகிய க. அப்பாராசனுகிய யானும் கேட்டுப் பெருமிதம் அடைந்தோம்.

நாட்டு மக்களின் நாட்டம் இதன் வழிப்பாட்டை கண்ட நம் கலா நாயகர் இந்நூலை வேதகிரியாம் திருக்கழுக்குன்றத்தில் அரங்கேற்றம் செய்ய எண்ணி உயர்திரு. கா. சுப்பையா சேர்வை அவர்களிடம் கூறியிருக்கிருர்கள். உயர்திரு. சேர்வை அவர்கள் தாமும் அரங்கேற்றத்திற்கு வருவதாகக் கூறவே, திருமிகு பெருந்தகையார் அவர்கள் எனக்கும் திருமூலநாதன் மூலமாக விவரந் தெரியச் செய்தார்கள்.

திருமிகு ஐயா அவர்கள், உயர்திரு சேர்வை அவர்கள், நான், திருமூலநாதன் நால்வரும் பேருந்தில் சென்னை சென்ருேம். உயர்திரு. கா. சுப்பையா சேர்வை அவர்களின் புதல்வர் திரு. சிவானந்தம் அவர்கள் எங்களையெல்லாம் பெசண்ட் நகரில் உள்ள உயர்திரு. சிதம்பரஞ் செட்டியார் அவர்களின் இல்லத்திற்கு அழைத்துச் சென்ருர்கள்.

சிதம்பரத்தாரின் இல்லம் வசதிகள் பலவும் அமைந்ததாய் இருந்தது. காலைக்கடன்களை முடித்து நீராடி சிவபூசனை நிறைவேற்றினேம். விருந்தினர்களை உபசரிப்பதில் நகரத்தார்க்கு நிகர் நகரத்தார்கள் தாம். ஆச்சி அமைத்த பலகார வகையும் உபசரிப்பின் மொழி நயமும் தரத்திற்குரிய தகவாய் மிளிர்ந்தன. அன்று நம் ஐயன் கருத்திற்பட்ட சிறுவராம் சித. ஏகப்பன் அவர்கள் தாம் இன்று நம் கலாநாயகர் இயற்றிய இராமாயண இலக்கியம் அச்சேற பத்தொடு ஐந்தாயிரம் (பதினைந்தாயிரம்) கொடுத்து உதவி இருக்கிருர்கள். இன்னும் உதவ இருக்கிருர்கள்.

Koviloor Digital Library

தம்பி சிவானந்தம் அவர்கள் மதிய உணவுக்கு சிறந்த உணவுச்சாலையில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

காலை நேரத்திற்கும் மதியத்திற்கும் உள்ள இடைவெளியில் பெசண்ட் நகரில் கோபுரம் போல் அமைத்திருந்த அட்ட இலக்குமி திருக்கோயிலில் வழிபாடியற்றி மதிய உணவுக்குச் சென்றோம்.

மதிய உணவுக்கு மேல் சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு திருக்கழுக்குன்றம் புறப்பட்டோம். திருக்கழுக்குன்றத்தில் நகரத்தார் விடுதியில் இரவில் தங்கினோம்.

பொழுது புலர்ந்தது. கண்ணன் பண்டாரத்தார் எங்கள் எதிரில் முகமலர்ச்சியுடன் வந்து நின்றார்கள். அவர்களின் பணிவார்ந்த கனிமொழிகள் எங்கள் சாமி இங்கு பூஸ்ட் இருக்கு, ஓவல் இருக்கு, நெஸ்காப்பி இருக்கு உங்கள் விருப்பப்படி சாப்பிடலாம் என்று கூறினார்கள். திருமிகு ஐயன் அவர்கள் பால் பருகினார்கள். நாங்கள் எல்லோரும் காப்பி குடித்தோம்.

நாங்கள் அனைவரும் வேதகிரீஸ்வரர் கோயிலின் எதிரேயுள்ள சங்கு தீர்த்தத்தில் நீராடி, பூசையை நிறைவேற்றி காலைப் பலகாரம் உண்டு கிரிச்சுற்று வரத் தொடங்கினோம். கிரியின் மேற்புரத்தில் அருள்மிகு சுப்பையா சுவாமிகள் சீவசமாதியடங்கிய இடத்திற்குச் சென்றோம். அருள்மிகு சுவாமிகளின் நிலைகளையெல்லாம் கண்ணன் பண்டாரத்தார் உணர்ச்சி மிகக் கூறினார்கள்.

வேதகிரியின் மேற்குச் சுற்றுப் பகுதியையும், வடக்குச் சுற்றுப்பகுதியையுங் கடந்து தெற்குச் சுற்றுப்பகுதிக்கு வந்து சேர்ந்தோம். அங்கு நம் சமயநெறி முதல்வர்கள் நால்வருக்கும் கோயில் கட்டியிருக்கிறார்கள். நால்வர் கோயிலில் அர்ச்சகர் முறையாக அர்ச்சனை செய்து திருநீற்றுப் பிரசாதம் முதலியவைகளை அளித்தார்கள். பஞ்சபுராணப் பாடல்களை நான் பாடினேன். அனைவரும் மகிழ்ச்சியுடன் வேதகிரி மீது ஏறி சுவாமி தரிசனம் செய்து, சுவாமியின்

Koviloor Digital Library

மூலத்தாலத்திற்குக் கீழ்ப்புறம் அமைந்துள்ள மண்டபத்தில் எல்லோரும் அமர்ந்தோம்.

திருமிகு ஐயன் அவர்கள் தாம் எழுதிய திருமுறைப் பெருநூல் விளக்கம் என்னும் நூலை படிக்கத் தொடங்கினார்கள். விரைந்து படித்துக் கொண்டு செல்லும் போது தம் நிலை மயங்கி சம்பந்தா! சம்பந்தா! சம்பந்தா! உன்னை வளர்த்தனடா! வளர்த்தனடா என வியந்து அலறினார்கள். ஐயன் அவர்கள் கீழே விழுந்து விடுவார்களோ என்று எண்ணித் தாங்கத் தயாரானேன். தவத்திரு. அன்பிற்கரசு அடிகள் ஐயன் அவர்களைத் தொட வேண்டாம். ஐயன் அவர்கள் எவ்வளவு நேரமானாலும் இதே நிலையில் இருக்கட்டும் என்று உரத்த குரலிலேயே கூறினார்கள். பெருந்தகையார் அவர்கள் சீவ சமாதி அடையப் போகிறார்கள் என்று எண்ணினேன். சிறிது நேரத்தில் பரவசத்திலிருந்து மனோநிலைக்கு வந்தார்கள்.

திருமுறைப் பெருநூல் விளக்கம் என்னும் எம் ஐயன் அவர்கள் எழுதிய ஒப்பற்ற நூல் வேதகிரீஸ்வரர் சந்நிதியில் நிறைவேறியது. மூலவர், அம்பிகை எல்லாத் தேவர்கட்கும் அர்ச்சனை செய்து விட்டு அன்புப்பிழம்பாம் கண்ணன் பண்டாரத்தார் இல்லத்திற்கு வந்தோம்.

மதிய உணவு பரிமாறப்படுகிறது. பலவகைக் காய்கறிகளும் பக்குவமாய் அமைக்கப்பட்டிருந்தன. கண்ணன் பண்டாரத்தார் அவர்கள் அமுதுண்ண அன்புடன் அழைக்கின்றார்கள். ஐயன் அவர்கள் முதலில் அமர நாங்களும் உட்கார்ந்தோம். உணவின் சுவையினும் கண்ணன் அவர்களின் கனியின் இனிய மென்மொழியும் உணவின் சுவையை மிகுதியாக்கியது.

ஆடிப்பூர விழாவிற்கு நாங்கள் திருக்கழுக்குன்றம் சென்றோம். ஆவணி உத்திராடத்தன்று தேவகோட்டை மாநகரின் கண்ணே அமைந்துள்ள முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளியில் முத்தமிழ் வேதத்திருச்சபையை எம் ஐயன் அவர்கள் தொடங்கினார்கள்.

Koviloor Digital Library

ஒவ்வொரு வாரம் வரும் ஞாயிற்றுக்கிழமை மாலையில் திருமுறைப் பெருநூல் விளக்கம் என்னும் நூலுக்கு எளிய முறையில் விளக்கம் சொல்லி வந்தார்கள். பதினைந்து ஆண்டுகள் இந்தச் சீரிய பணியைப் பெருந்தகையார் புரிந்து வந்திருக்கிறார்கள்.

திருமுறைப் பெருநூல் விளக்கம் என்னும் நூல் நூற்பாவாலும், ஆசிரியப் பாவாலும் பாடப் பெற்றது. முதற்றிருமுறை ஏழுபண்களுக்கும் திருமிகு ஐயன் அவர்கள் மறைவிளக்கத்தை மிகவும் விரித்து கூறியுள்ளார்கள்.

இரண்டாந் திருமுறை பூர்வமீமாம்சையின் தொகுப்பும் விரிவும் நூற்பாவால் இயற்றியிருக்கிறார்கள்.

மூன்றும் திருமுறை உத்தர மீமாம்சையின் தொகுப்பும் விரிவும் நூற்பாவால் இயற்றி இருக்கிறார்கள்.

வேதப்பாயிரப் பாடல்களுக்கும், பாஞ்சராத்திரம் வைகாநசம், இரண்டாந் திருமுறை பூர்வ மீமாம்சை, உத்தர மீமாம்சை ஆகியவற்றிற்கும் நான் இயன்றவரை விளக்கம் எழுதியிருக்கிறேன்.

ஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய இருபத்தொரு பண்களில் இருபது பண்களுக்கு மேற்கணக்கு (வியாகரண) அட்டவணை செய்திருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் 1 குயர் பத்து நோட்டுகளில் விளக்கம் எழுதியுள்ளேன். மேலும் 21 பண்களுக்கும் எழுபத்தொரு திறங்களுக்கும் திருமிகு ஐயன் அவர்கள் எழுதிய நூற்பாக்களின் அடியொற்றி பண் முதலும் பாங்கார் திறமும் என்னும் விரிவார்ந்த நூல் ஒன்று எழுதியிருக்கின்றேன்.

திருமுறைப் பெருநூல்களின் விளக்கங் காண பண்ணிலக்கணச் சூக்கம் அல்லது பண்ணிசை இலக்கணச் சூக்கம் என்னும் கருவி நூல் ஒன்றை பெருந்தகையார் இயற்றியிருக்கிறார்கள். இந்நூல் தற்போது பண்ணிசைக்கு முதல் நூலாக விளங்குகின்றது.

Koviloor Digital Library

ஓசை, பரிசம், உருவம், சுவை, மணம் என்னும் ஐம்புலக்கூருகவும், மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரண வகையாகவும் மக்கள் யாக்கை அமைந்துள்ளமை போன்று பண்ணிசை இலக்கணச் சூக்கமும் அமைந்துள்ளது.

"அத்த னமைத்த உடம்பிரு கூறினுள்
சுத்தம தாகிய சூட்சுமஞ் சொல்லுங்கால்
சத்த பரிச உருவ ரசகந்த
புத்திமா னாங்காரம் புரியட்ட காயமே"

என்னும் திருமந்திரத்தின் அடிப்படையில் யாக்கப்பட்டது இந்நூல்.

மாயை என்னும் தத்துவத்தின் கூருக அமைந்தது பண்ணுகும். பண் பூதாகாரமாகத் தோன்றக் கூடியது.

பூதாகாரமாகப் பொருள் விளக்கமின்றித் தோன்றக் கூடிய பண்ணினே, சுரம், யாழ், தாளம், கமகம், சுருதி . லயம், சுத்தம், ஏற்றம், இறக்கம், தாளச்சதி ஆகிய சுவைகள். இந்தளம், பியந்தைக் காந்தாரம், பஞ்சுரம், கௌசிகம், பழம் பஞ்சுரம், காந்தாரம் ஆகிய பண்கள், குறிஞ்சி, முல்லே, மருதம், நெய்தல், பாலே, திணே நிலங்களும் குறிஞ்சியாழ் முல்லேயாழ், மருதயாழ், நெய்தல் யாழ், பாலே யாழ் ஆகியவை ஓசை, பரிசம், உருவம், சுவை, மணம் ஆகிய ஐம்பூதத் தன்மைத் திறங்களில் தோன்றியனவாய் மிளிர்கின்றன.

ஐந்திணேக்குரிய முருகன், மால், காளி, இந்திரன், வருணன் முதலிய தெய்வங்களும் தோன்ரு நின்றன.

அடுத்து அந்தக் கரணத்தின் ஒன்ருகிய புத்தியாம் சூரிய கதியில், ஐந்திணேக்குரிய பெரும் பொழுது ஆறும், சிறுபொழுது ஆறும் மருவப் பெற்ற சந்தக்கலி, வெண்டளேத் தூக்கு, ஆசிரியம், வஞ்சி, சூத்திரம், கட்டளேக்கலி ஆகிய பருவப் பண்பாட்டுக்களும் தோன்ரு நின்றன.

Koviloor Digital Library

மேலும் இரவி ஊர்ந்து செல்லும் பரிமாக்கள் ஏழு என்று சொல்லும் படியமைந்த சீர் ஏழிற் பொருந்திய உதயாத்தமாகிய அந்தாதியைக் கொண்டு அடிகள் ஏழுடன் கூடிய எட்டில், இராசி ஒவ்வொன்றிலும் கோள்கள் எட்டுங் கூடப் பிரபஞ்சங்கள் தொண்ணூற்றுறு ஆயின.

சீர் ஏழுடன் அந்தாதி ஒன்றும் சேர நின்ற எட்டுடன் அடிகள் ஏழும் சேர உண்டாகிய பெருக்கம் ஐம்பத்தாறில் களவியல் நீத்த கற்பியிலில் தனித்த பண்பாட்டு ஆறையும் பெருக்க வரும் முந்நூற்று முப்பத்தாறும் பெருக்கத்தில், ஓகாரம் பொருந்திய வெண்டுறையும், ஏகாரம் பொருந்திய செந்துறையும், ஐகாரம் பொருந்திய அம்மானையும் ஆகிய மூன்றையும் பெருக்க ஆயிரத்தெட்டு பண்பாட்டுகள் ஆயின.

பூதாகாரமாய்த் தோன்றும் பண்களின் இயல்பினையெல்லாம் விளக்கித் தம் வயப்படுத்தும் தன்மையனவாய் விளங்குவன கனி, மலர், காய், மா, விளம், நாள் என்ற ஆறும் ஆம். இவை சண்முகதூலம் என்று சொல்லப்படுவன. இவையே ஈச்சுர தத்துவமாய் விளங்கி நிற்பன.

மாயை தத்துவமாய், பூதாகாரமாய் விளங்கும் பண்களை ஈச்சுர தத்துவமாய் விளங்கும் சண்முக தூலம் ஆறும் தம் வயப்படுத்தி நிற்கும் தகவுடையனவாயின. தகவுடையனவாய் விளங்குகின்றன.

மதியின் (சந்திரன்) கூருக அமைந்த உடம்பும் அதன் சூக்கம் ஆகிய மனத்தின் தன்மையுமாக நோக்கும் போது

கனியின் மனமாக உழை, இளி என்னும் இசைகள் தோன்றும். ஆகமாக கண்கள் அமையும். கண்களைப் பற்றித் தளை கொள்ளும். கலிப்பாவாகவும், தூங்கல் ஓசையுமாகவும் கனியென்னும் தூலம் விளங்கிக் காணும். மலர் என்னும் சண்முக தூலத்தின் மனமாகக் கைக்கிளை இசையமைகிறது. ஆகமாக செவியமைகிறது. செவியைப் பற்றித் தளை கொள்ளும் பாவாக வெண்பா அமைகிறது. இவற்றைக் கொண்டு அமைவது மலர் என்னும் தூலமாம்.

Koviloor Digital Library

அடுத்து சண்முக தூலத்தின் மூன்ருவதாகிய காய் என்னும் பகுதியின் மனமாகத் தோன்றும் இசை துத்தம் ஆகும். இந்த இசை பண்தானமாகிய நாவினைச் சார்ந்து வாயினைப் பற்றித் தளை கொண்டுள்ள அகவல் என்னும் பாவாகவும், அது தரும் ஓங்கல் ஓசையுமாக அமையும்.

காயின் மனமாகத் துத்த இசையும் அதன் ஆகமாக நாவும் அமையும்.

அடுத்து சண்முக தூலத்தின் நான்காம் பகுதியாகிய 'மா' என்பதன் மனமாகத் தார இசை தோன்றும். இது பண் தானமாகிய மூக்கினைச் சார்ந்து, கவிக்கும் தளை கொண்டுள்ள வஞ்சிப்பாவாக மிளிரும்.

மா என்னும் தூலத்தின் இசை தாரம். ஆகம் மூக்கு என்பனவாம்.

அடுத்து சண்முக தூலத்தின் ஐந்தாம் பகுதியாகிய விளத்தின் மனமாக விளரி இசையும், குரலாம் இசையும் தோன்றும். இதன் ஆகம் (பண்தானம்) நெஞ்சமும், குரல்வளையும் ஆம். இவற்றைச் சார்ந்து மெய்யிடமாக அகவல் என்னும் பா கூவல் ஓசையாய் மிளிர்கின்றது.

அடுத்து சண்முக தூலத்தின் ஆருவதாகிய நான் என்னும் பகுதியின் மனம் விழி கைக்கிளை இசையாகும். இதற்குரிய பண்தானம் அணரி என்னும் உண்ணுக்கின் மேற்புறமாம். இது உட்செவியைப் பற்றித் தளை கொண்டு முதிர்ந்த வெண்பாவாக மிளிரும்

மறைவுருவாளனின் (வேதபுருடனின்) உடலாக, இயம் என்னும் நாதம் அமைவதால் இதற்கு இயக்காயம் என்று பெயரிடப்பட்டிருக்கின்றது. இந்த இயக்காயத்திற்கு ஓசை, பரிசம், உருவம், ரசம், கந்தம் என்னும் ஐம்பூதக் கூரும் புறநிலைக்கூறும், புத்தி, மனம், அகங்காரம் என்னும் அகநிலைக் கூருகவும் விளக்க வேண்டியுள்ளது.

Koviloor Digital Library

இதனை நன்குணர்ந்த பெருந்தகையார் அவர்கள் தாம் இயற்றிய பண்ணிலக்கணச் சூக்கம் என்னும் அரிய தமிழிசை இலக்கண நூலை புரியட்ட காயத்தின் நியதின் வழி ஆக்கி அருளியிருக்கிறார்கள்.

நூல்களின் உலகில் இஃதோர் புதுமையாம். இதனைப் படித்து உணர்ந்து உவகை கொள்வதே இசைவாணர், இயல்வல்லார் பரதம் வல்லார் ஆகியோரின் கடமையும் முறையும் ஆகும் என்பதனை மிகவும் பணிவுடன் கூறிக் கொள்கின்றேன்.

மறைந்தவை தோன்றுவதும் தோன்றியவை மறைவதும் இந்த ஞாலத்தியல்பாம்.

அடுத்து நம் கலா நாயகர் ஆக்கியருளிய அகத்தியம் என்னும் அரிய தமிழ் இலக்கண நூலைப்பற்றி எழுத முற்படுகின்றேன். அகத்தியம் என்னும் நூலைபற்றி எழுதத் தொடங்குமுன் அகத்தியர் யார் என்பதனை விளக்குதல் வேண்டும்.

அகத்தின் எழும் ஆவளியின் உண்டாகும் பத்து வகையான இயத்தை (ஓசையை) உணர்ந்து. தெளிந்தவர்கள் யாவரோ? அவர்கள் அனைவரும் அகத்தியர் யாவர். அகத்தியர் என்பது ஒருபட்டமாகும். ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் என்றாற் போல.

அகத்தில் எழுகின்ற பத்து வகையான நாதம் யோகசாதன நெறியில் ஆழ்ந்து பணிந்தவர்களுக்கே அது பார்க்கத் தக்கதாகும் என்று தமிழ் ஆம் ஆகமந்தத்தருளிய திருமூல தேவ நாயனார் கூறுகின்றார்கள்.

அந்த மந்திரம்

மணிகடல் யானை வளர்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபே ரிகையாழ்
தணிந்தெழு நாதங்களாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே. என்பதாகும்.

Koviloor Digital Library

நம் கலா நாயகர் அவர்கள் அகத்து இயமான நாதம் பத்தினையும் நன்ருகப் பார்த்து அழுந்தி தெளிந்த நிலையிலேயே அகத்தியம் என்னும் தமிழ் நிறைவு இலக்கண நூலை முதனூலாகத் தரணி மாந்தர்க்கு வழங்கியுள்ளார்கள்.

இந்த நூல், தன்மை வடிவம், பெயர் என்னும் மூவகை நிலையில் விளங்கித்தெளிவை நல்கும்.

நூற்பாக்கள் அனைத்தும் விலைவரம்பில்லா மாணிக்கக் குவியல்கள்.

"எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே."

என்று தொல்காப்பியப் பெருந்தகையார் கூறியாங்கு. அழகிய நுட்பத்தினை யுணர்ந்து வேதநெறி முறைகளை விளக்கும் பெருந்தகையார் அகத்தியம் என்னும் அருள்மலி இலக்கண நூலை அந்தணர் மறையாகத் தந்துள்ளார்கள்.

இம்மாபெரு இலக்கண நூலுக்கு விளக்கவுரை அடியேன் எழுதியிருக்கின்றேன்.

இந்நூலை மக்கள் உணருங் காலத்து, தமிழ் மொழி எங்ஙனம் சிவம் ஆகின்றது என்பது பெறப்படும். இந்த அரிய பெரிய அகத்தியம் என்னும் இலக்கணத்தை மக்கள் உணர்ந்து மகிழ நன்புலச் சான்ருேர்கள் ஆன்ருேர்கள் அயராது உழைக்க வேண்டும்.

இந்த நூல் மதுரை உயர்திரு. எக்ஞ நாரயணன் B.Sc., அவர்களின் பொருள் உதவியால் அச்சிடப் பெற்று அட்சய வருடம்

Koviloor Digital Library

(1986) ஆவணி மாதம் 29ஆம் தேதி முத்தமிழ் வேதத் திருச்சபையின் ஒன்பதாவது ஆண்டுவிழாவில் வெளியிடப் பெற்றது.

இன்னும் பெருந்தகையார் செய்த அகத்தியர் உண்மையும், நாடித்தொகை விளக்கமும், ஞானசம்பந்தர் காலநிர்ணய விளக்கம், அறுபத்துநான்கு கலைகளின் விளக்கம், பத்மபுராணம், இலிங்கபுராணம், பிர்மாண்டபுராணம், வாமனபுராணம், முதலிய நூல்களும் என்னிடமும், என்செல்வப் புதல்வன் தேவகோட்டை இராம.ஆதிரெத்தினம் அவர்களிடமும் இருக்கின்றன. இவற்றையெல்லாம் வெளிவரச் செய்ய வேண்டிய நற்றவப் பணியினை சிவபுண்ணியசீல சிவனடியார் சிதம்பரம் செட்டியார் மகன், சிரஞ்சீவி கனடா டாக்டர் சித. ஏகப்பன் அவர்கள் உலகிற்கு கிடைக்க முத்தமிழ்வேதத் திருச்சபை மூலம் வெளியிட்டு வருகிறார்கள். கரண இலக்கணம் நூலை தேவகோட்டை திரு.அ.ராம.அ.லெ.அ.மு.வீ. செம்பொன் (எ) அருணாசலம் செட்டியார் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்வேத நாவலர் அவர்களின் வரலாற்றுக் குறிப்புகள் என்னும் இந்நூல் பிரமாதி வருடம் மாசி மாதம் இரண்டாம் நாள் (14-2-2000) திங்கட்கிழமை ரோகினி நட்சத்திரம் தழுவிய மாலை 5.25 மணியளவில் எழுதி நிறைவுறுகின்றது.

ஆக்கியோன்

மாணவன் களிமேடு அப்பர் அவைப் புலவர்.
திருமுறைச் செல்வர். நல்லாசிரியர்.
புலவர். க. அப்பராசன், முன்னாள் தமிழாசிரியர்
தேபிரித்தோ மேனிலைப்பள்ளி
தேவகோட்டை

14.2.2000

Koviloor Digital Library

உ
சிவமயம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
46368

நம் கலா நாயகராம் சாத்தாமகன் அவர்கள் விபவ ஆண்டு தைத் திங்கள் 24ஆம் நாள் சதய நட்சத்திரம் கூடிய நல்லோரையில் ஒடுக்கங் கண்டார்கள்.

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரி ஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

இதுவரை வெளியிட்ட நூல்கள்

வ.எண்.	நூலின் பெயர்		விலை
1.	கரணஇலக்கணம்	ரூ.	5.00
2.	இராமாயண இலக்கியம்	ரூ.	27.00
3.	பண்ணிலக்கணச் சூக்கம்	ரூ.	25.00
4.	அகத்தியம்	ரூ.	108.00
5.	முத்திநெறி இலக்கணம்	ரூ.	51.00
6.	இலிங்க புராணம்	ரூ.	51.00
7.	பண்செய் கரணம்	ரூ.	5.00
8.	இரத்தினச் சுருக்க இராமாயணம்	ரூ.	21.00
9.	அண்டஒளி திருமூலர் திருமந்திரம் (சூனிய சம்பாதனை)	ரூ.	51.00
10.	கலைஞானம்	ரூ.	21.00
11.	திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை	ரூ.	400.00
12.	திருஞானசம்பந்தர் கால நிர்ணய விளக்கம்	ரூ.	20.00
13.	நட்சத்திர பதிகங்கள்	ரூ.	51.00
13.	"தமிழ் வேதநாவலர்" "வைத்தியமணி" சற்குரு. சித.வே. சண்முகநாதபிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு	ரூ.	51.00

Koviloor Digital Library

KOVIROOR ANDAVAR LIBRARY, KOVIROOR
A. No. 46368

Koviloor Digital Library